*5*

## *திறவுகோல் வசனம்: மத்தேயு 26:20-29*

# கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல்

*இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் வழியில் சமாரியாவின் வழியாகப் பயணம் செய்கையில், ஒரு கிராமத்திற்கு வந்தார், அங்கு அவர் பத்துத் தொழுநோயாளிகளைக் குணமாக்கினார் (லுக்கா 17:11-19) அங்கு பல பாடங்களை எடுத்துரைத்த பின்பு அவர் யூதேயாவுக்கு வந்தார் (மாற்கு 10:1). அவர், எரிகோவின் வழியாகக் கடந்து சென்று (மாற்கு 10:46), பெத்தானியாவுக்கு வந்து சேரும் வரையிலும் தமது பயணத்தைத் தொடர்ந்தார் (லுக்கா 19:11). பின்பு விரைவிலேயே அவர் ஒரு கோவேறுக் கழுதையின் மீது ஏறி, வெற்றிகரமாக எருசலேமுக்குள் பயணித்தார் (மாற்கு 11:1-11; லூக்கா 19:29-44), அங்கு அவர் தேவாலயத்தில் இருந்து காசுக்காரர்களைத் துரத்தினார் (மாற்கு 11:15-18). தொழுநோயாளியாக இருந்த சீமோனின் வீட்டில் ஒரு பெண், அவர் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக அவரை நளதம் என்ற உத்தம தைலத்தால் அபிஷேகித்தாள் (மாற்கு 14:3-9). அவர் பெத்தானியாவுக்கு அருகில் இருந்த ஒலிவ மலையில் இரவு வேளைகளில் தங்கியிருந்து கொண்டு, தினந்தோறும் எருசலேமுக்குச் சென்று திரும்பி வந்தார் (லூக்கா 21:37, 38).*

*மத்தேயு 26:1, 2ல், பஸ்காவுக்கு இரண்டு நாட்கள் முன்பு, இயேசு விரைவில் நடக்க இருந்த தமது மரணத்தைப் பற்றித் தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் தகவல் தெரிவித்தார். இதற்குப் பின்பு விரைவிலேயே, அவரைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாஸ் வெறும் முப்பது வெள்ளிக்காசுகள் பெற வேண்டி, அவரைப் பிடித்துக் கொலை செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்திருந்த பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் பேரம் பேசினார் (மத்தேயு 26:3-16; லூக்கா 22:1-6).*

### *பஸ்கா*

> *பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள் (மாற்கு 14:12).*

> *அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம்பண்ணுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் அதை எங்கே ஆயத்தம்பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.*

*அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும்போய், அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள் (லூக்கா 22:8-13).*

### இராப்போஜனத்தின் நாள்

*இயேசு கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியதற்குப் பின் வந்த பஸ்கா நாள், கல்வியாளர்கள் வட்டாரத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் காணப்படும் விபரங்கள், பொருட் சுருக்கமான (பிற) சுவிசேஷப் புத்தகங்களின் விபரங்களுக்கு நேர்மாறாக இருப்பதாகச் சிலரால் நினைக்கப்பட்டுள்ளது.*

*கர்த்தருடைய இராப்போஜனத்தின் நாளைக் குறித்துப் புரிந்து கொள்ளுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது ஆனால் அது அவசியமானதாக இருப்பதில்லை, இது பஸ்கா பண்டிகைக்கும் புளிப்பில்லாத அப்பப் பண்டிகைக்கும் இடையில் பழைய ஏற்பாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள வித்தியாசம் என்ற உண்மையாக உள்ளது (லேவியாரகமம் 23:5, 6; எண்ணாகமம் 28:16, 17). பஸ்கா ஆட்டுக் குட்டியை அடித்து உண்ணுதல் என்பது முதலாம் மாதத்தின் பதினான்காம் நாளில் நடைபெற்றது (யாத்திராகமம் 12:3-8; எண்ணாகமம் 9:2-5). பதினைந்தாம் நாளில் புளிப்பில்லா அப்பப் பண்டிகை தொடங்கிற்று. அது ஏழுநாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.[1]*

*புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இந்த இரு பண்டிகைகளும் ஒரே நாளில் ஆசரிக்கப்பட்டன (மாற்கு 14:1, 12). இது யோவான் சுவிசேஷத்தைப் பொருட்சுருக்கமான (பிற) சுவிசேஷங்களுடன் இசைவிணக்கமாக்குதலில் உள்ள பிரச்சனையை விளக்கப்படுத்த உதவலாம். யோவான் யூதத்துவக் காலமுறைமைக்குப் பதிலாக ரோமர்களின் காலமுறைமையைப் பயன்படுத்தினார் என்ற மிகவும் சாத்தியக்கூறான விஷயம் ஆழ்ந்த சிந்தனைக்குரிய இன்னொரு விஷயமாக உள்ளது.*

*யோவான் சுவிசேஷ விபரம் மாற்கு சுவிசேஷத்திற்கு நேர்மாறானதாக உள்ளது. உதாரணமாக, பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ஆறாம் மணி வேளையில் ஒப்புக்கொண்டார் என்று யோவான் எழுதினார் (யோவான் 19:14), அதே வேளையில் இயேசு மூன்றாம் மணி வேளையில் சிலுவையில் அறையப்பட்டார் என்று மாற்கு கூறினார் (மாற்கு 15:25).*

*"முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் யோவான், எபேசு நகரில் இருந்துகொண்டு எழுதியதில், நாம் இன்று கணக்கிடுவது போன்று நள்ளிரவு தொடங்கி நடுப்பகல் வரையில் எண்ணிக்கையைக் கூட்டிச் செல்வதான ரோமர்களின் காலக்கணக்கீட்டு முறையைத் தழுவியிருக்கலாம்."[2] யோவான் இந்தக் காலக் கணக்கீட்டு முறையைப் பயன்படுத்தினார் என்று ஒப்புக்கொள்ளுதல், அவரது*

எழுத்துக்களைப் பிற சுவிசேஷ விபரங்களுடன் இணக்கமாக்குவதற்கு மிகவும் சுலபமான வழியாக உள்ளது. இது உண்மையாக இருக்கவில்லை என்றால், சுவிசேஷ விபரங்கள் இணக்கமற்றவையாக இருக்கும்.

> *கர்த்தருடைய இராப்போஜனம் உணவாக இருந்ததா இல்லையா என்பது பற்றிக் கல்வியாளர்கள் விவாதித்துள்ளனர். ... பொருட்சுருக்க (பிற) சுவிசேஷங்கள் இது பஸ்கா உணவாக இருந்தது என்று உரைக்கின்றன (மத்தேயு 26:17 முதல்.), ஆனால் யோவான் 19:14ம் வசனம் இதன் மீது சந்தேகத்தை எழுப்புகிறது. யோவானின் பத்தியானது பொருட்சுருக்கப் பாரம்பரியத்துடன் முரண்பட வேண்டும் என்று அவசியமில்லை, இருப்பினும் "பஸ்காவுக்கு ஆயத்தநாளும்" என்ற சொல்விளக்கம் "பஸ்கா வாரத்திற்கு ஆயத்தநாள்" என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும், ஏனெனில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வாராந்தர ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாக இருந்தது. "பஸ்கா" என்ற சொற்றொடர் இங்கு ஒரு வாரம் நடைபெற்ற புளிப்பில்லாத அப்பப் பண்டிகைக்கான குறிப்பாக உள்ளடக்கப் பட்டிருக்க வேண்டும், இது அந்தக்கால கட்டத்தில் பஸ்காவை ஒரு நீண்ட பண்டிகை என்று கூறும் பிரபலமான பயன்பாட்டுடன் ஒன்று கலந்திருந்தது.[3]*

சதுசேயர்களால் நடைமுறையில் கொள்ளப்பட்டிருந்த ரோம காலக்கணக்கீட்டை யோவான் பயன்படுத்தியது, பஸ்கா ஆசரிப்புநாள் பற்றிய வேறுபாடாகக் காணப்படுவதையும் விளக்குவதாக இருக்கும்.

> *பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கும் பொதுவான வேளையான நிசான் மாதம் பதினான்காம் தேதி பிற்பகல் வேளையில் இயேசு சிலுவையில் அறையப்பட்டார். நிசான் மாதம் 14ம் தேதி என்பது வியாழக்கிழமை சூரியன் மறையும் வேளையில் தொடங்கியிருந்தது, அது வெள்ளிக்கிழமை சூரியன் மறையும் வேளை வரையில் முடிவடையாது. இது ஆட்டுக்குட்டிகளைக் கொல்லுவிப்பதற்கான பொதுவான காலவேளையாக இருந்தது, ஆனால் தேவாலய அதிகாரிகள், வேறொரு நாள்காட்டியைப் பின்பற்றுபவர்களுடன் சமரசம் செய்துகொண்டு, அவர்கள் வியாழக்கிழமை பிற்பகலில் ஆட்டுக்குட்டியைக் கொல்ல அனுமதித்தனர். இந்த வேறுபாடு, இயேசுவைக் குற்றம் சாட்டியவர்கள் (பிலாத்துவின் அரண்மனையில் இருந்த வேளையில்) (யோவான் 18:28) இன்னும் அவர்கள் பஸ்கா உணவை உண்டிராதது ஏன் என்பதை விளக்குகிறது. அவர்கள் அதை வெள்ளிக்கிழமை மாலையில், நிசான் மாதம் 15ம் தேதியில், சூரியன் மறைவில் தொடங்கும் நாளில் அதைச் செய்ய இருந்தனர்.[4]*

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கைக்கொள்ளுதல் என்பது, யூதரின் (பஸ்கா) நாள் தொடங்கியதற்குப் பின்னர் சற்று நேரம் கழித்துத் தொடங்கியது (மத்தேயு 26:20; மாற்கு 14:17). ரோமரின் காலக் கணக்கீட்டின்படி, இது வியாழக்கிழமை மாலை 6 மணிக்குப் பிந்திய காலகட்டமாக இருந்தது. அடுத்துவந்த காலை வேளையில், பத்து மணிநேரத்திற்குப் பின்பு இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.

இயேசு ஓய்வு நாளுக்கு முந்திய வெள்ளிக்கிழமையன்று சிலுவையில்

அறையப்பட்டார் (மாற்கு 15:42, 43; லூக்கா 23:46, 54; யோவான் 19:14, 30, 32). "ஓய்வுநாளுக்குப் பின்வந்த" நாளின் அதிகாலை வேளையில் - ஞாயிற்றுக்கிழமை என்பது வாரத்தின் முதல்நாளாக இருந்ததால் - பெண்களில் சிலர் கல்லறைக்குச் சென்று "அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற மெய்சிலிர்க்கும் செய்தியைக் கேள்விப்பட்டனர் (மத்தேயு [28]:1, 6; மாற்கு 16:2, 6; லூக்கா 24:1, 6; யோவான் 20:1).[5]

## இராப்போஜனத்தின் அமைவு

இந்தப் பஸ்கா உணவு இயேசுவுக்கு முக்கியமானதாக இருந்தது:

> வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன் (லூக்கா 22:14, 15).

விரைவில் நிகழவிருந்த அவரது மரணத்தின் துன்பமும் அழுத்தமும், இயேசுவின் முகத்தின் வெளிப்பாடு மற்றும் அவரது குரலின் தொனி ஆகியவற்றில் காண்பிக்கப்பட்டு இருக்கலாம். முன்னதாக அவர், அணுகிவந்து கொண்டிருந்த ஸ்நானத்தின் நிமித்தமாக, அதாவது முன்னெதிர்நோக்கப் பட்டிருந்த சிலுவையின் பெருந்துன்பத்தினால், தாம் நெருக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டு இருந்ததாக "sunecho" உரைத்திருந்தார் (லுக்கா 12:50). கெத்செமெனே தோட்டத்தில் அவர், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 26:38அ). அவர் ஜெபிக்கையில், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது என்பது அவரது ஜெபத்தின் முன் உள்ளுணர்வையும் அவரது இருதயத்தின் ஏக்கத்தையும் வெளிப்படுத்திற்று (லூக்கா 22:44).

இயேசுவும் அப்போஸ்தலர்களும் பஸ்கா உணவை உண்டபோது, நவீன கலாச்சாரத்தில் உள்ளது போன்று நேராக அமர்வதற்குப் பதிலாக, இயேசுவும் அப்போஸ்தலர்களும் உணவு மேஜையின்மீது சாய்ந்து அமர்ந்திருந்தனர். இந்த அமைவில் யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தார் (யோவான் 13:23). இந்தச் செயலும் இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் இந்தப் பஸ்காவைப் புசித்தல் பற்றிய தமது விருப்பத்தை உரைத்ததும் (லூக்கா 22:15), அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பையும் (யோவான் 13:1), அவர்களின் தனிப்பட்ட ஆதரவை அவர் விரும்பியதையும் கூட (மத்தேயு 26:40) வெளிப்படுத்திற்று.

இயேசுவும் அப்போஸ்தலர்களும் பஸ்காவை ஆசரிப்பதில் அனேகமாக யூதக்கால முறைமையைப் பின்பற்றி இருப்பார்கள். இது நான்கு பாத்திரங்களைப் பயன்படுத்தும் வழக்கத்தையும் உள்ளடக்கியிருந்தது. ''பல்வேறு இடைவேளைகளில், சந்தோஷத்தின் அடையாளமாக, நான்கு பாத்திரங்களில் திராட்சரசம் அருந்தப்பட்டது.''[6] இந்த நான்கு பாத்திரங்களும் கல்வியாளர்களால் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- தொடக்கநிலை - நன்றி செலுத்தும் ஒரு ஜெபம் மற்றும் முதல் பாத்திரத்தில் பானம்பண்ணுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து (எகிப்தில்

*அடிமைத்தனையில் இருந்ததை நினைவுகூரும்படிக்கு) பச்சையான கசப்புக்கீரைகளும் பழக்கூட்டும் உண்ணப்பட்டன. பஸ்காவின் அர்த்தத்தை ஒரு மகன் கேட்டு அதற்கு அவனது தந்தை பதில் அளித்தார்.*

- *வழிபாடு - பஸ்கா வரலாறு எடுத்துரைக்கப்பட்டது, பங்கேற்பவர்கள் சங்கீதம் 113 மற்றும் 114 (சிறிய ஹல்லல்) ஆகியவற்றைப் பாடினர், பின்பு இரண்டாவது பாத்திரம் பகிர்ந்து கொள்ளப்பட்டது.*
- *உணவு - ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து புளிப்பில்லாத அப்பம் மற்றும் ஆட்டுக்குட்டியின் மாமிசம் ஆகியவை உண்ணப்பட்டன. ஆட்டுக்குட்டியின் மாம்சம் முழுவதுமாக உண்ணப்பட்ட பின்பு, மூன்றாவது பாத்திரம் (ஸ்தோத்திரத்தின் பாத்திரம்) பரிமாறப்பட்டது.*
- *முடிவு - (மாபெரும் ஹல்லல் என்ற) சங்கீதம் 115:1-18ஐப் பாடியபின்பு, மக்கள் நான்காவது கடைசியுமாக பாத்திரத்தில் பானம்பண்ணினர்.*

## புதிய நினைவுகூரும் பண்டிகை (லூக்கா 22ஐ வாசிக்கவும்)

இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் பஸ்கா உணவை உண்டபின்பு, அவர் புளிப்பில்லாத அப்பத்தையும் திராட்சரசத்தையும் கொண்டு தமது இராப்போஜனத்தை ஏற்படுத்தினார். சிலர், லூக்கா 22:17ல் இயேசு பயன்படுத்திய பாத்திரம் பஸ்காவில் பயன்படுத்தப்பட்ட இரண்டாவது பாத்திரமாக இருந்தது என்றும் லூக்கா 22:20ல் குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரம் - கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்த இயேசு பயன்படுத்திய பாத்திரம் - உண்மையில் பஸ்காவின் மூன்றாவது பாத்திரமாக இருந்தது என்றும் நம்புகின்றனர். "(புதிய ஏற்பாட்டு) பதிவேடுகளில் இருந்து, இயேசு பஸ்கா உணவை உண்ட பின்பு திராட்சரசத்தின் மூன்றாவது பாத்திரத்துடன் சம்பந்தப்படுத்தி கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார் என்பது தெளிவாகத் காணப்படுகிறது."[7]

> *இந்தப் பாத்திரம் (ஸ்தோத்திரத்தின் பாத்திரமாகிய மூன்றாவது பாத்திரம்) யூதர்களின் மத்தியில் பாரம்பரியமான பஸ்கா உணவின் பாகமாக இருந்தது. இது உணவு வேளையின்போது அதில் பங்கேற்றவர்கள் எடுத்துக்கொண்ட நான்கு பாத்திரங்களில் மூன்றாவதாக இருந்தது. பாரம்பரியமாக இந்தப் பாத்திரம் யாத்திராகமம் 6:6, 7ல் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவனுடைய நான்கு வாக்குத்தத்தங்களில் மூன்றாவது வாக்குத்தத்தத்துடன் தொடர்புபடுத்தப்பட்டது ... இது மீட்பிற்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாகிறது ...*[8]

இயேசு பாத்திரத்தை என்ன செய்தார் என்பது இதேபோன்று மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது; ஆனால் லூக்கா மாத்திரமே அவர் அப்பத்தைக் கொடுப்பதற்கு முன்னர் அதை (பாத்திரத்தை) என்ன செய்தார் என்பதைக் காண்பிக்கிறார் (லூக்கா 22:18, 19).

கொடுக்கப்பட்ட உண்மைகளில் இருந்து, லூக்கா பதிவு செய்துள்ளவற்றைப் பற்றிய சரியான கண்ணோட்டம் என்பது பின்வருமாறு இருக்கலாம்.

- *இயேசு "ஒரு பாத்திரத்தை" (இது முன்பு குறிப்பிடப்பட்டது அல்ல ஆனால் பஸ்காவில் பயன்படுத்தப்பட்டிருக்கச் சாத்தியமான ஒன்று ஆகும்) எடுத்தார் (வசனம் 17அ).*
- *பின்பு அவர், பாத்திரத்தில் இருந்ததைத் தமது அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் "பகிர்ந்து கொள்ள" (diamerizo) வேண்டும் என்று அறிவுறுத்தினார் (வசனம் 17ஆ). "பகிர்ந்துகொள்ளுதல்" என்பதற்கான வார்த்தை "பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[9] அவர்கள் அனேகமாக இதை, பாத்திரத்தை ஒருவர் பின் ஒருவராக[10] எடுத்து அதில் உள்ளதைக் கொஞ்சம் தங்கள் சொந்தப் பாத்திரங்களில் ஊற்றிக்கொள்ளுதல் மூலம் செய்திருக்கலாம்.*
- *அந்த வேளையில் அதில் பானம்பண்ணும்படி அவர்களுக்கு அவர் கூறவில்லை.*
- *அடுத்ததாக அவர், தேவனுடைய இராஜ்யம் வரும் வரையில் தாம் அதில் பானம்பண்ணப் போவதில்லை என்று அவர்களிடத்தில் கூறினார் (வசனம் 18).*
- *இதன்பின்பு அவர், அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் அதை உண்டனர் (வசனம் 19).*
- *பின்பு அவர், தாம் ஸ்தோத்திரம் பண்ணியிருந்ததும் அப்போஸ்தலர்கள் தங்கள் சொந்தப் பாத்திரங்களில் ஊற்றப் பயன்படுத்தியிருந்ததுமான "பாத்திரத்தை" (முன்பு "ஒரு பாத்திரம்" என்று குறிப்பிடப்பட்ட பாத்திரம்) எடுத்தார் (வசனம 20அ).*
- *அதைத் தொடர்ந்து, அவர்கள் அதைப் பானம்பண்ணுபடியும் அந்தத் திராட்சரசம் புதிய உடன்படிக்கைகுரிய தமது இரத்தமாக இருந்தது என்றும் அவர்களுக்கு அவர் கூறினார் (வசனம் 20ஆ; மத்தேயு 26:27).*
- *திராட்சரசத்தைத் தங்கள் சொந்தப் பாத்திரங்களில் ஏற்கனவே ஊற்றி வைத்திருந்த நிலையில், அப்போஸ்தலர்கள் அதை ஒன்றாகப் பானம்பண்ணினர்.*

## அங்கிருந்தவர்கள்

*மூன்று சுவிசேஷ விபரங்களுமே, பஸ்கா உணவின்போது பன்னிரு அப்போஸ்தலர்கள் அங்கிருந்தனர் என்று உரைக்கின்றன:*

> *சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார் (மத்தேயு 26:20).*

> *சாயங்காலமானபோது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார் (மாற்கு 14:17).*

> *வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள் (லூக்கா 22:14).*

*இப்போஜனத்திற்குப் பின்பு யூதாஸ் இரவு வேளைக்குள் வெளியெறிச் சென்றார் (யோவான் 13:2-4, 30). இதைத் தொடர்ந்து இயேசு, மற்ற பதினோரு அப்போஸ்தலர்களுக்கும் ஒரு நீண்ட போதனை உரையைக் கொடுத்தார்*

*(யோவான் 13:31-16:33).*

*இயேசு அவர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்துதல்களின் காரணமாக, அப்போஸ்தலர்கள் மாத்திரமே அங்கிருந்தனர் என்பதை உணர்ந்து அறிதல் முக்கியமானதாக உள்ளது. அவரைப் பின்பற்றிய யாவரும் அல்ல, ஆனால் அவரது அப்போஸ்தலர்கள் மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஏவுதல் பெற வாக்களிக்கப்பட்டிருந்தனர் (யோவான் 14:17, 26; 15:26, 27; 16:7, 13). அவர், "நீங்கள்" மற்றும் "நம்முடைய" என்று அவர் கூறியபோது, தமது பேச்சு முழுவதிலும் அவர்களுடன் மட்டுமே அவர் பேசிக்கொண்டிருந்தார் (14:7-20, 25-31; 15:3-5, 19, 26, 27; 16:1, 2, 4-7, 10, 12-17, 19, 20, 22-28, 31-33). அவர் "ஒருவனும்" (யோவான் 14:6; 15:13), "அவன்" (யோவான் 14:12, 21, 24; 15:5, 6, 12, 23), "ஒருவன்" (யோவான் 14:23; 15:6) மற்றும் "அவர்கள்" மற்றும் "அவர்களுக்கு" (யோவான் 15:20-22, 24; 16:2, 4, 9) என்றெல்லாம் கூறியபோது மற்றவர்களை உள்ளடக்கினார்.*

*அப்போஸ்தலர்கள் வேறுபட்ட சந்தர்ப்பத்தில் இதைப் பிறருக்கும் ஏற்படுத்தியிராத வரையில், இயேசு இந்த வாக்குத்தத்தங்களை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே ஏற்படுத்தினார். பவுல் உள்ளிட்ட அப்போஸ்தலர்களைத் தவிர புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மாத்திரமே வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொண்டனர் (எபேசியர் 3:3-5).*

*யோவான் 14-16ல் இயேசுவின் உரையைக் கேட்பதற்கு அங்கிருந்தவர்களான அப்போஸ்தலர்களிடம் மாத்திரமே இயேசு பேசினார் என்பதைப் பின்வரும் கூற்றுக்கள் சுட்டிக்காண்பிக்கின்றன:*

- *அவர்கள் கலங்காமலும் வருத்தப்படாமலும் இருக்க வேண்டும் என்று அவர்களிடம் அவர் கூறினார் (யாவான் 14:1, 27; 16:6, 22).*
- *அவர்கள் தொடக்கத்தில் இருந்தே இயேசுவுடன் இருந்திருந்தனர் (யோவான் 14:25; 15:27).*
- *என்ன நடக்கும் என்பதை அது நடப்பதற்கு முன்பே அவர்களிடம் அவர் கூறியிருந்தார் (யோவான் 14:29; 16:4).*
- *இனியும் தாம் அவர்களிடம் அதிகமாகப் பேசும்படித் தம்மிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று அவர் கூறினார் (யோவான் 14:30).*
- *இயேசு தமது பிதாவினிடத்தில் இருந்து தாம் அறிந்திருந்தவற்றை அவர்களுக்குக் கூறியிருந்தார் (யோவான் 15:15).*
- *அவர்கள் ஜெப ஆலயங்களில் இருந்து துரத்தப்பட்டு கொலை செய்யப்படுவார்கள் என்று அவர் எச்சரித்தார் (யோவான் 16:2).*
- *அவர் தாம் எங்கு செல்கிறார் என்று தம்மிடம் கேட்க வேண்டாம் என்று கூறினார் (யோவான் 16:5).*
- *சற்றுக்காலத்தில் தம்மை அவர்கள் காணமாட்டார்கள் என்றும் பிற்பாடு தம்மை அவர்கள் காண்பார்கள் என்றும் அவர் கூறினார் (யோவான் 16:16-19).*
- *அவர்களிடம் அவர் உருவகமாகப் பேசியிருந்தார் (யோவான் 16:25).*
- *அவர்கள் தங்கள் சொந்த இல்லங்களுக்குச் சிதறடிக்கப்படுவார்கள் (யோவான் 16:32).*

*இயேசுவின் போதனைகளை ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தினார் (எபேசியர் 3:5), அவர்கள் சபையின் அஸ்திபாரமாக உள்ளனர் (எபேசியர் 2:20). அப்போஸ்தலர்கள் யாருடைய தலைகளில் கைகளை வைத்தனரோ (நடபடிகள் 8:18; 19:6) அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டனர். அப்போஸ்தலர்கள் பவுலினால் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டபடி தனிச்சிறப்பான வரங்களைக் கொண்டிருந்தனர்: "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரிந்தியர் 12:12).*

*அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்டிருந்த ஏவுதல், இயேசுவின் போதனை சரியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற உறுதிப்பாட்டை நமக்குத் தருகிறது. அவர்களுக்கு அவர் சகலத்தையும் போதித்து அவர் (இயேசு) போதித்திருந்த எல்லாவற்றையும் அவர்களின் மனங்களில் நினைப்பூட்டி (யோவான் 14:26), அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தினார் (யோவான் 16:12, 13).*

*இராப்போஜனத்தில் அங்கிருந்தவர்கள் மாத்திரமே இந்த வரங்களைப் பெற வாக்குத்தத்தம் பெற்றவர்களாக இருந்தனர். அந்த வரங்கள் அப்போஸ்தலர்களின் கரங்களினால் மாத்திரம் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படக் கூடியவையாக இருந்தன.*

## சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல்

*இராப்போஜனத்திற்குப் பின்பு அப்போஸ்தலர்கள், தங்களுக்குள் யார் பெரியவர் என்று வாதிடத் தொடங்கினர். ஊழியம் செய்பவரே மிகவும் பெரியவர் என்று இயேசு விளக்கப்படுத்தினார் (லூக்கா 22:24-27; காண்க - யோவான் 13:3-17).*

*இயேசு தமது பதிலை விவரிப்பதற்காக, இராப்போஜனத்தில் இருந்து எழுந்து (யோவான் 13:1-4அ), ஒரு மேல் துண்டைக் கட்டிக்கொண்டு, தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவான் 13:4ஆ-10). அதை அவர் முடிந்த பின்பு, பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல (யோவான் 13:15, 16).*

*இந்த விளக்கம் லூக்கா சுவிசேஷ விபரத்தின் பின்வரும் விபரத்துடன் இணையாக உள்ளது:*

> *"பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்" (லூக்கா 22:27).*

*இந்தக் கூற்றுக்கள் மற்றும் இவற்றின் இணையான காட்சியமைவு ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, லூக்காவும் யோவானும் ஒரே நிகழ்வைப் பற்றிக் கலந்துரையாடினர் என்று நாம் முடிவு செய்யலாம். யார் பெரியவர் என்பதைப் பற்றி இயேசு தமது வாயின் வார்த்தையினால் போதித்தது மாத்திரமின்றி, தமது அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம், மாபெரும் தன்மை பற்றி விளக்கமும் அளித்தார்.*[11]

*இந்தச் செயல்விளக்கத்திற்குச் சற்று முன்னர், அப்போஸ்தலர்களில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுப்பார் என்று இயேசு முன்னுரைத்திருந்தார்:*

> *"தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார். அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்" (லூக்கா 22:22, 23).*

*யோவானுக்கு அடுத்து அமர்ந்திருந்த பேதுரு, இதை யார் செய்வார் என்று இயேசுவினிடம் கேட்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார். இயேசு, தம்மைக் காட்டிக்கொடுப்பவர் யூதாஸ்தான் என்று சுட்டிக்காண்பிப்பதற்காக அப்பத்துணிக்கையை யூதாஸுக்குக் கொடுத்த பின்பு, யூதாஸுக்குள் சாத்தான் புகுந்தான், அவர் யூத அதிகாரிகளை இயேசுவினிடத்தில் வழிநடத்திக் கொண்டு வருவதற்காக இரவு வேளையில் வெளியே புறப்பட்டுச் சென்றார் (யோவான் 13:21-30).*

## தொகுப்புரை

*கர்த்தருடைய இராப்போஜனம் என்பது சபைக்கு ஒரு முக்கியமான நிகழ்வாக உள்ளது. இதன் மூலமாக இயேசு தம்மைப் பின்பற்றுவர்கள், உலகத்தின் பாவங்ளுக்காகத் தாம் மரிக்கக் கூடும்படி மனிதகுல வரலாற்றில் தமது மாம்சப்பிரகாரமான பிரவேசத்தை நினைவுகூருவதற்குக் கண்ணால் காணக்கூடிய ஒரு வழியை அளித்துள்ளார். சபை உறுப்பினர்கள் என்ற வகையில் நாம், வாரந்தோறும் இராப்போஜத்தை உண்ணுதல் மூலமாக, நமது பாவங்களுக்காக நிகழ்ந்த அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் விரைவில் நிகழ இருக்கும் அவரது மறுவருகை ஆகியவற்றில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தைத் தொடர்ந்து அறிக்கையிடுகிறோம். கிறிஸ்து மறுபடியும் வரும் வரையிலும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:26).*

---

*குறிப்புகள்*

[1]*யாத்திராகமம் 12:17, 18; 13:4-7; 34:18 ஆகிய வசனப் பகுதிகளை வாசிக்கவும்.* [2]Emmett Russell, "Hour," *The New International Dictionary of the Bible,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1987), 453. [3]Marvin R. Wilson, "Passover," *The International Standard Bible Encylopedia,* ed. Geoffey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:677-78. [4]Robert L. Thomas, ed., *A Harmony of the Gospels with Explanations and Essays*, Using the text of the New American Standard Bible (Chicago: Moody Press, 1978), 322. [5]William Hendriksen, *Exposition of the Gospel According to Luke,* New Testa-

ment Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1978), 954. [6]Wilson, 677. [7]Ibid., 678. [8]Thomas, 213. [9]Hendriksen, 954. [10]J. Reiling and J. L. Swellengrebel, *A Translator's Handbook on the Gospel of Luke* (New York: United Bible Societies, 1971), 686. *முதன்மைப் பாத்திரத்தில் இருந்து ஒவ்வொரு நபரும் தமது சொந்தப் பாத்திரத்தில் ஊற்றிக்கொள்ளுதல் என்பது பஸ்காவின்போது யூதர்களின் பழக்கவழக்கமாக இருந்தது, இவ்வாறு ஒரே வேளையில் அவர்கள் யாவரும் பானம்பண்ண முடிந்தது. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் இந்தப்பழக்க வழக்கத்தைப் பின்பற்றி இருக்கலாம்.*

*[11]இந்தத் செயலில் மூலம் அவர், தாழ்மையான ஊழியம் என்பது பாதம் கழுவுதலாக மாத்திரமே இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் போதித்தார். புதிய ஏற்பாட்டின் பிறபகுதிகள் இதை ஒரு தாழ்மையான வேலையாக முன்வைக்கின்றன (லூக்கா 7:38-44; 1 தீமோத்தேயு 5:10), இது ஆராதனையின் ஒரு பகுதியாக எடுத்துரைக்கப்படுவதில்லை. ஒரு இல்லக் காட்சி அமைவில், அழுக்கான பாதங்களைத் தண்ணீர் கொண்டு சுத்தப்படுத்துதல் (ஆதியாகமம் 18:4; 19:2; 24:32; 43:24; நியாயாதிபதிகள் 19:21; 1 சாமுவேல் 25:41; 2 சாமுவேல் 11:8; உன்னதப்பாட்டு 5:3) அல்லது பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்ய ஆசாரியர்கள் பிரவேசிப்பதற்கு முன்னர் அவர்களின் பாதங்களைக் கழுதல் (யாத்திராகமம் 30:19-21; 40:30, 31) என்பதே பழைய ஏற்பாட்டில் இதன் நோக்கமாக இருந்தது.*

## ஒரு நாள் அட்டவணை: யூதத்துவ கால அளவையை ரோமானிய கால அளவையுடன் ஒப்பிடுதல்

பின்வரும் அட்டவணை, பஸ்கா ஆசரிப்பு மற்றும் கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் இருந்து சிலுவையின் மீது இயேசுவின் மரணம் வரையிலான நேரங்களின் இசைவிணைக்கமாக உள்ளது:

| *யூதத்துவக் காலக்கணக்கீடு* | | *ரோமானியக் காலக்கணக்கீடு* |
|---|---|---|
| | **பஸ்கா மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம்** | |
| *(மத்தேயு 26:20; மாற்கு 14:17)* வெள்ளிக்கிழமை, தொடங்கிய சற்று நேரத்தில் | *“சாயங்காலம்”* | *வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்குப் பின்பு* |
| | **இயேசுவை விசாரணை செய்தல்கள் முடிவடைதல்** | |
| *வெள்ளிக்கிழமை, காலை வேளையில்* | | *(யோவான் 19:14)* வெள்ளிக்கிழமை, காலை 6.00 மணி |
| | **இயேசு சிலுவையில் அறையப்படுதல்** | |
| *(மாற்கு 15:25) வெள்ளிக்கிழமை, 3ம் மணி வேளை (காலை)* | | *வெள்ளிக்கிழமை ,காலை 9.00 மணி* |
| | **மூன்று மணிநேரம் இருள் சூழுதல்** | |
| *(மத்தேயு 27:45; மாற்கு 15:33; லூக்கா 23:44) வெள்ளிக்கிழமை 6ம் மணி வேளை தொடங்கி, 9ம் மணி வேளை வரையிலும்* | | *வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையிலும்* |